# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093606

1. District / மாவட்டம்: ஊ.த.க.இ.
   PS / காவல்நிலையம்: ஊ.த.க தலைமையகம்
   Year / ஆண்டு: 2019
   FIR No. / மு.த.அ. எண்: 23
   Date / நாள்: 18.11.2019

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from / நாள் முதல்: 17.10.2019 1500 hrs.
   Date to / நாள் வரை: 15.11.2019 16.30 hrs.
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 18.11.2019
   Time / நேரம்: 16.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 18.11.2019
   Time / நேரம்: 18.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 10 kms. வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address / முகவரி: தாசில்தார் அலுவலகம், மயிலாப்பூர் கிரீன்வேஸ் சாலை, சென்னை
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: திரு.சு.ரவிச்சந்திரன்
   (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: சுப்பிரமணி
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 10.01.1960
   (d) Nationality நாட்டினம்: இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில்: வியாபாரம்
   (g) Address முகவரி: எண். 7/19, 2வது தெரு, வெள்ளீஸ்வரர் தோட்டம் R.K. நகர், R.A. புரம், சென்னை-28.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு.சுப்பிரமணி, தாசில்தார், மயிலாப்பூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ S. Judy Abigail Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 18.11.19

[signature] 18/11/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. JUDY ABIGAIL
Rank: நிலை Inspector of Police No. எண்
Special Investigation Cell
VLAC, Chennai-16.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண். 23/2019 பிரிவு 7 ஊழல் தடுப்பு திருத்த சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12ன் தொடர்ச்சி பின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, காவல் ஆய்வாளர் S.ஜூடி. அபிகேயில் ஆகிய நான் இன்று 18.11.2019 மாலை 4 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, சென்னை-28, R.A. புரம், R.K. நகர், வெள்ளீஸ்வரர் தோட்டம், 2வது தெரு, எண்.7/19 என்ற முகவரியில் வசிக்கும் S.ரவிச்சந்திரன் என்பவர், என் அலுவலகம் ஆஜராகி என்னிடம் எழுத்துபூர்வமான புகார் மனு ஒன்றை அளித்தார். அவர் அளித்த புகார் மனு விவரம் பின்வருமாறு.

அனுப்புநர்,
S. ரவிச்சந்திரன்,
த/பெ, சுப்பிரமணி,
எண். 7/19, 2வது தெரு,
வெள்ளீஸ்வரர் தோட்டம்,
R.K. நகர், R.A.புரம்,
சென்னை-28.

பெறுநர்,
ஆய்வாளர் அவர்கள்,
இலஞ்ச ஒழிப்புத்துறை,
ஆலந்தூர், சென்னை.

ஐயா,

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்துவருகிறேன். நான் சந்தோஷ்குமார் டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் லோடு லாரிகளை வைத்து தொழில் செய்து வருகிறேன். எனது உறவினர் முறை சகோதரி திருமதி.கே.ஜெகதீஸ்வரி அவர்கள் சென்னை, மந்தைவெளி, ஆண்டிமானியம் தோட்டம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பின் P-14 பிளாக்கில் சுமார் 45 வருடங்களாக வசித்து வருகிறார். திருமதி.கே.ஜெகதீஸ்வரி அவர்களின் கணவர் பெயர் R.கிருஷ்ணன். அவர் கடந்த 2011-ம் வருடம் காலமாகிவிட்டார். மேலும்

திருமதி.கே.ஜெகதீஸ்வரி அவர்களின் மாமியார் பெயர் டில்லி அம்மாள். திருமதி.டில்லி அம்மாள் அவர்களும் கடந்த 1985-ம் வருடம் காலமாகிவிட்டார். மேலும் திருமதி.ஜெகதீஸ்வரி தற்போது குடியிருந்து வரும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் P-14 பிளாக் என்ற வீடு இறந்து போன அவரது மாமியார் திருமதி. டில்லி அம்மாள் அவர்களின் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது மந்தைவெளி ஆண்டிமானியம் தோட்டம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் உள்ள வீடுகள் அனைத்தும் பழுதடைந்துவிட்டதால், அதனை இடித்து விட்டு பயனாளிகளுக்கு புதியதாக வீடுகள் கட்டி தருவதாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கூறியுள்ளது. மேலும், திருமதி.ஜெகதீஸ்வரி குடியிருக்கும் மந்தைவெளி ஆண்டிமானியம் தோட்டம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள P-14 பிளாக் அவரது மாமியார் திருமதி.டில்லி அம்மாள் பெயரில் உள்ளதாலும், மேலும், அவர் காலமாகி விட்டதாலும் மற்றும் அவரது ஒரே மகனும், திருமதி.ஜெகதீஸ்வரின் கணவரும் ஆகிய திரு.R.கிருஷ்ணன் என்பவரும் காலமாகி விட்டதாலும், மேற்படி குடிசை மாற்று வாரிய குடியிருப்பு P-14 பிளாக் என்ற வீட்டினை திருமதி.ஜெகதீஸ்வரி பெயருக்கு உரிமை மாற்றம் பெற விரும்பினார். அது தொடர்பாக விசாரித்த போது, வருவாய்த் துறையினர் வழங்கும், உறவுமுறை சான்றிதழ் தேவைப்பட்டது.

எனவே கடந்த 17.10.2019 அன்று உறவுமுறை சான்று வேண்டி உரிய ஆவணங்களுடன் திருமதி.ஜெகதீஸ்வரி, மைலாப்பூர் தாசில்தாருக்கு விண்ணப்பித்தார். திருமதி.ஜெகதீஸ்வரி உடல்நல குறைவாக இருந்ததாலும், அவரது மகன் திரு.பாலாஜி மற்றும் அவரது மகள் திருமதி.ஜெயந்தி ஆகிய இருவரும் பணியின் காரணமாக வெளியே இருப்பதாலும், என்னை அழைத்து இந்த பணியை முடித்துதருமாறு அக்கா ஜெகதீஸ்வரி என்னிடம் கூறினார். நானும், மேற் கண்ட அவரது விண்ணப்பத்தினை பெற்று, 17.10.2019 அன்று மதியம் சுமார் 3 மணியளவில் மயிலாப்பூர் தாசில்தார் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து, விண்ணப்பத்தினை கொடுத்தேன். அப்போது என்னுடன் எனது அக்காவின் மைத்துனர்

மேற்படி குடிசை மாற்று வாரியத்தில் வசிக்கும் திரு.லோகநாதன் உடனிருந்தார். தாசில்தார் அவர்களும், நான் கொடுத்த விண்ணப்பத்தினை படித்து பார்த்து விட்டு, என்னிடம், திருமதி.ஜெகதீஸ்வரி அவர்களுக்கு உறவுமுறை சான்றிதழ் வழங்குவதற்கு நிறைய செலவாகும், கலெக்டர் ஆபிஸ் வரைக்கும் பணம் கொடுக்க வேண்டி உள்ளது, நீங்கள் எவ்வளவு தருவீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் விண்ணப்பத்தாரர் ஒரு விதவை மூதாட்டி என்றும், பார்த்து உதவி செய்யுங்கள் சார் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்.

பின்னர், அதனை தொடர்ந்து மந்தைவெளி வருவாய் ஆய்வாளர் அவர்கள் திருமதி.ஜெகதீஸ்வரின் குடிசை மாற்று வாரிய வீட்டினை கடந்த 01.11.2019 அன்று நேரில் வந்து விசாரணை செய்துள்ளார்கள். பின்னர், நான் வருவாய் ஆய்வாளர் மந்தைவெளி அவர்களை அவரது அலுவலகத்தில் 06.11.2019 அன்று மாலை சுமார் 4 மணியளவில் சந்தித்து திருமதி.ஜெகதீஸ்வரி அவர்களுக்கு உறவுமுறை சான்றிதழ் தொடர்பாக கேட்டேன். வருவாய் ஆய்வாளர் மந்தைவெளி அவர்களும், திருமதி.ஜெகதீஸ்வரி அவர்களின் உறவுமுறை சான்றிதழ் தொடர்பாக விசாரணை முடித்து அறிக்கை தாசில்தாரர், மயிலாப்பூர் அவர்களுக்கு அனுப்பிவிட்டதாக தெரிவித்தார்.

பின்னர் நான் 15.11.2019 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் திரு.சுப்பிரமணி, தாசில்தார், மயிலாப்பூர், அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து, திருமதி.ஜெகதீஸ்வரி அவர்களின் உறவுமுறை சான்றிதழ் தொடர்பாக கேட்டேன். அப்போது, தாசில்தார், திரு.சுப்பிரமணி, என்னிடம் சான்றிதழ் ரெடியாக இருப்பதாக சொல்லி ரிசிவ்டு என்று எழுதி கையெழுத்து போட்டு தருமாறு கூறினார். நானும் அவ்வாறு எழுதி எனது கையெழுத்தினை போட்டேன். ஆனால், தாசில்தார் சான்றிதழை தர மறுத்துவிட்டார். நான் கேட்ட போது, சான்றிதழை தரமுடியாது எனவும், ரூ.25,000/- பணம் தந்தால் தான் தர முடியும் என்று கூறினார். நான் தாசில்தாரிடம் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று தெரிவித்தேன். அதற்கு அவர் ரூ.10,000/- மாவது கொடுத்தால் தான் உறவுமுறை சான்றிதழ் வழங்கமுடியும் என்று கறாராக தெரிவித்துவிட்டார். நான் எனது அக்கா திருமதி.ஜெகதீஸ்வரி அவர்களை

சந்தித்து, உறவுமுறை சான்றிதழ் வழங்க தாசில்தார் அவர்கள் பணம் ரூ.10,000/- கேட்பதை தெரிவித்தேன். திருமதி.ஜெகதீஸ்வரி அவர்கள் இலஞ்சமாக யாருக்கும் பணம் கொடுக்க வேண்டாம். இது தொடர்பாக இலஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்கும்படி என்னிடம் தெரிவித்தார். அதன்பேரில், நான் திருமதி.ஜெகதீஸ்வரி என்பவருக்கு உறவுமுறை சான்றிதழ் வழங்க, என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட, திரு.சுப்பிரமணி, தாசில்தார், மயிலாப்பூர் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
Sd/- S.ரவிச்சந்திரன்
(S. ரவிச்சந்திரன்)
18.11.2019

Sir, Received the complaint today (18.11.2019) at 16.00 hrs and the same was communicated to my higher officers and upon getting permission a quiet and discrete verification was made over the complaint. After satisfaction and getting permission from the higher authorities, a case in V&AC Hqrs Cr.No.23/19 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 was registered today (18.11.19) at about 18.00 hrs and taken up for investigation.

Sd/- S.JUDY ABIGAIL,
18/11/19
Inspector of Police,
V&AC, SIC,
Chennai.

INSPECTOR OF POLICE,
Special Investigation Cell,
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.